மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Tholkappiyam's Nuthaliyatharithal: Explanation and Reason for its Vaippumurai (Based on Commentators)

S. Muruganand

Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, India

Manuscript ID : **MT471A0156**

Volume : **3**

Issue : **4**

Month : **December**

Year : **2023**

Received: 09.10.2023
Revised: 30.10.2023
Accepted: 10.11.2023
Published: 02.12.2023

Pages : 42-53

DOI: 10.5281/zenodo.10245588

ABSTRACT:

Tholkappiyam marapiyal's last suthram point outs 'Thanthira Utthis'. There are 32 utthis mentioned. Also, commentators mentioned some other utthis. These Thanthira utthis are the basic formulas to write and read the grammatical scripts. Nuthaliyatharithal is the first utthi mentioned in Tholkappiyam's list. This paper explains Nuthaliyatharithal utthi based on commentators. This paper also deals about Nuthaliyatharithal's subdivision, similarities and differences between Nuthaliyatharithal, Uytthukkontunarthal and Gnapakam kooral, reason for Nuthaliyatharithal's Vaippumurai based on Commentators.

KEYWORDS:

Tholkappiyam, Vaippumurai, Thanthira Utthi, Nuthaliyatharithal, Uytthukkontunarthal, Gnapakam Kooral, Ilakkana Uruvakkam

தொல்காப்பியம் சுட்டும் 'நுதலியதறிதல்' : விளக்கமும், அதன் வைப்புமுறைக் காரணமும் (உரையாசிரியர்கள் அடிப்படையில்)

சீ. முருகானந்த்
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியலின் ஈற்று நூற்பாவானது தந்திர உத்திகளைச் சுட்டுகிறது. அவை 32 ஆகும். உரையாசிரிகர்கள் அவற்றுக்கு மேற்பட்ட உத்திகளையும் குறிப்பிடுகின்றனர் என்பதும் காணலாம். இந்நிலையில் அத்தந்திர உத்திகள், அடிப்படையான இலக்கண நூல் உருவாக்க - வாசிப்பு முறைகளாக அமைந்துள்ளன. அவற்றுள் முதலாவதாகச் சுட்டப்படுவது 'நுதலியதறிதல்' என்னும் உத்தியாகும். அதனை உரையாசிரியர்கள் அடிப்படையில் விளக்குவதாகவும், நுதலியறிதலின் இனம், நுதலியறிதலுக்கும் உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகம் கூறல் ஆகிய உத்திகளுக்கும் இடையமைந்த ஒற்றுமை, வேற்றுமைகள் ஆகியனவற்றை ஆராய்வதாகவும், 32 உத்திகளில் 'நுதலியதறிதல்' என்னும் உத்தி முதலில் சுட்டப்பெறுவதற்குரிய வைப்புமுறைக் காரணத்தை உரையாசிரியர்களின் உரைவழிக் கண்டறிவதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

கருச்சொற்கள்

தொல்காப்பியம், வைப்புமுறை, தந்திர உத்தி, நுதலியதறிதல், உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகம் கூறல், இலக்கண உருவாக்கம்

முன்னுரை

தொல்காப்பியம் தமிழில் கிடைத்துள்ள முதல் நூலாகவும் இலக்கணம் என்னும் அறிவியல்துறைசார் நூலாகவும் திகழ்கிறது. அது பலதிறப்பட்ட துறைசார் பொருண்மைக் கூறுகளுடன் தமிழ்மொழியின் இலக்கண, இலக்கியவியல் பகுதிகளை ஆழமான பேசுபொருளாகக் (ஆய்ந்தணுகும் தளங்களாகக்) கொண்டுள்ளமை அவதானிக்கப்பெற்று, விளக்கமுறை, விதிமுறை இலக்கணம் என வெவ்வேறு அடிப்படைகளில் அறிஞர்களால் அணுகப்பெற்றுள்ள நெடிய ஆராய்ச்சிவரலாறு உடையது.

தொல்காப்பியம் சுட்டும் 'தந்திர உத்தி' என்னும் நூற்புணர்ப்புமுறை, அளவையியல் கருத்தாக அமைந்து, இலக்கண நூல் உருவாக்க - வாசிப்பு

முறைமைகளைப் புலப்படுத்தல் காணலாம். அவ்வகையில், அதன்கண் அமைந்துள்ள **'நுதலியதறிதல்'** என்னும் உத்தி குறித்தும், உத்திகளில் அதன் வைப்புமுறைக் காரணம் குறித்தும் விளக்குவதாக இக்கட்டுரை அமைதல் காணலாம்.

நுதலியதறிதல்

'தந்திர உத்தி(கள்)' தமிழில் தொல்காப்பியம் (1610), வீரசோழியம் (178), நன்னூல் (14), பாடலம் (தொல்.பொருள்.மரபி.112:ப.244), மாறலங்காரம் (25), இலக்கண விளக்கம் (இலக்.விளக்.898), சுவாமிநாதம் (10, 11) முதலியவற்றில் பேசப்பெற்றுள்ளது.

தமிழில் இலக்கணநூல் யாப்பதற்கென்று அமைக்கப்படலாயினமையின் தந்திர உத்திகளை **'நூற்புணர்ப்பு'** (உத்தி வகை.1984: ப.165, தத்துவநோக்கில் தமிழிலக்கியம்.2014: ப.12) என்றே க.வெள்ளைவாரணனார் உள்ளிட்ட தமிழறிஞர்கள் வழங்கிவருதல் காணலாம்.

தந்திர உத்தி என்பது, **"சூத்திரத்தின்பாற் கிடப்பதோர் பொருள்வேறுபாடு காட்டுவது"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.199) என்று இலக்கணநூல் உருவாக்க - வாசிப்பு முறையாக அமைதலை விளக்கியுள்ளார் இளம்பூரணர்.

தொல்காப்பியம், தான் சுட்டும் 32 உத்திகளில் **"நுதலியதறிதல்"** (தொல்.பொருள்.மரபி.112.1994) என்னும் ஓர் உத்தியைக் கொண்டுள்ளது. இவ்வுத்தி **'நுதலிப்புகுதல்'** (நன்., பாடலம், சுவாமி.), **'உள்ளியதுணர்த்தல்'** (மாறனலங்காரம்) எனப் பெயரிலும், கருத்திலும் சிறுமாற்றத்துடன் பிறஇலக்கண நூல்களிலும் சுட்டப்படுதல் காணலாம்.

நுதலியதறிதல் என்பது **"சூத்திரத்திற் சொற்ற பொருளுணர்த்தலன்றி இதன் கருத்திதுவென உணர்த்தல்"** என்று உரை வரைந்து **"அஃதாவது 'எழுத்தெனப்படும்' (நூன்.1) என்னுஞ் சூத்திரத்துள் எழுத்து இனைத்தென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று என்றல்"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.200) என்று உதாரணமும் எடுத்தோதி 'ஒரு நூற்பா நுதலியது இன்னது என உரைக்கும் கருத்துரையே (ஒரு நூற்பா தனித்த கருத்துச் சூழ்நிலையுடன் அமைவதும்) நுதலியது-அறிதல் எனப்பெற்றது' என்னும் தன் கொள்கையைப் புலப்படுத்துகிறார் இளம்பூரணர்.

பேராசிரியர், **"சூத்திரத்துள் ஓதிய பொருளாற் சொல்லப்படும் பயன் இல்லதுபோலச் சொல்லியதனானே அதற் கேற்றவகையாற் கருதியுணரப்படுபொருள் இன்னதென்றுகொள்ள வைத்தல்"** என்று உரை வரைந்து **'வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார்'** (தொல்.சொல்.கிளவி.46) **எனவும், 'சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்'**

(தொல்.சொல்.கிளவி.41) **எனவும் இவை வழுவற்க வழுவமைக்க என்னும் இருபகுதியுள் வழுவமைத்தற்கெழுந்தனவென்பது கருதினான் ஆசிரியனென்பது அறியவந்தன"** (தொல்.பொருள்.மரபி.112. உரை.1994: ப.208) என்று உதாரணமும் எடுத்தோதுதலான் நுதலியதறிதலாவது 'ஒரு சூத்திரம் தான் நிற்பதன் பயன் இன்னதெனக் கருதியுணரும்படி அமைதல்' என்னும் தன் கொள்கையைப் புலப்படுத்துதல் காணலாம்.

மேலும், அவர் இதற்கு இனம் உள்ளமையையும் உய்த்துக்கொண்டுணர்தல் (ஞாபகம் கூறல்) உடன் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் தெரிவுபடுத்தி உள்ளமையும் காண வேண்டுவது.

தொல்காப்பிய உரைகளில் "இவ்வுத்திக்கு இளம்பூரணர், பேராசிரியர் இருவர் மட்டுமே தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டுகின்றனர் என்று அமுதன் குறிப்பிடுகிறார்." (தொல். உத்திகள்.2014: ப.70). இதனால், தொல்காப்பிய உரையாசிரியர்கள் வேறெவரும் இதனைப் பெயர்சுட்டித் தம் உரைகளில் குறிப்பிடவில்லை என்பதை அறியலாம்.

நுதலியதறிதலின் இனம்

இளம்பூரணர் **"இனத்தின் சேர்த்தி"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.204) என்பதற்குச் **"சொல்லிய இனத்தோடு பாகுபடுத்துரைத்தல்"** என்று உரைவரைந்துள்ளார். அவர், பேராசிரியர் கொண்ட முறையில் பாகுபாடு (இனம்) கொண்டிலர் என்பதும் தெளிவுபடுதலால் கூறப்பெற்ற 32 உள் சில ஒன்றுக்கு மற்றொன்று தொடர்புடையதாகத் தோன்றுமாறு (அவர் உரை) அமைத்துள்ளமையான் அவை ஒன்றுக்கு ஒன்று இனமாக அமையும் எனக்கருதினார் எனக் கொள்ளலாம். அப்படியாயின், 'நுதலியதறிதலு'ம் 'உய்த்துக்கொண்டுணர்தலு'ம், 'ஞாபகங் கூறலு'ம் ஓர் இனமாதல் காணலாம். ஆனால், இளம்பூரணர் அப்படி ஒன்றும் தெளிவுபடக் கூறிற்றிலர் என்பதும் கவனிக்கவேண்டியது.

இனி, பேராசிரியர் தொல்காப்பியம் சுட்டிய உத்திகளுள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமையும் உத்திகளை ஒரு வகையன எனக் கொண்டார் என்பதனை **"ஒரு வகையான் உடைத்து"** என்றார் ஆகலின் தெளியப்படும் (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.208).

பேராசிரியர், உத்தியும் அதன் இனமும் எனப் பகுத்து உரைவரைந்துள்ளார். அவ்வழி, நுதலியதறிதலின் இனம்பற்றி **"இனி, மூவகைத் தமிழ் வழக்கமும் நுதலியதும், அதிகாரம் நுதலியதும் அதிகாரத்துள் ஓத்து நுதலியதும் ஓத்தினுள் சூத்திரம் நுதலியதுமெனவும் இவை நுதலியதறிதலிற் பகுதியாய் அடங்கும்"**

(தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.208) எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் அதிகாரம் முதலியன தெளிவுபட ஒரு சூத்திரத்தை அமைத்தலை[யும்] அல்லது அவ்வகையின் அமைந்தது சூத்திரம் என விரிக்கும் அவதாரிகையை[யும்] அவர் நுதலியதறிதலின் இனமாகக் கொண்டுள்ளமை விளங்குதல் காணலாம். இது மேலும் ஆய்விற்குரிய ஒன்றேயாம்.

நுதலியதறிதல் நூலுத்தியா? உரையுத்தியா?

நூல் செய்தல் தொடர்பானதும், உரை செய்தல் தொடர்பானதுமாகத் (இலக்கண நூல் உருவாக்க - வாசிப்பு முறைமைகளாகத்) தந்திர உத்திகள் இருநிலையில் அமைதல் காணலாம். அவ்வகையில் தொல்காப்பியத்துள் கூறப்பெற்றுள்ள **“நுதலியதறிதல்”** (தொல்.பொருள்.மரபி.112.1994) எனும் தந்திர உத்தியானது நூலுத்தியா? உரையுத்தியா? எனக் காண்பது இன்றியமையாததாகும். இளம்பூரணர் **“சூத்திரத்திற் சொற்ற பொருளுணர்த்தலன்றி இதன் கருத்திதுவென உணர்த்தல்”** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.200) என்று விளக்கமளிக்கிறார். நூற்பாவின் சொற்ற பொருளாவது நுணுக்கமெல்லாம் தோன்றக்காணும் அர்த்தமாகும். இந்நிலையில், அதன் திரண்ட கருத்தே - நுதலியது எனும்படிக்கு உரைத்து, அதனை, உணரவைத்தல்- அறிதல் எனும்படிக்கு விளக்கமளிக்கிறார்.

“அ.ஃதாவது ‘எழுத்தெனப்படும்’ என்னும் சூத்திரத்துள் எழுத்து இனைத்தென வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று என்றல்” (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.200) என இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டான் நுதலியதறிதலாவது ஒரு சூத்திரத்தின் கருத்து இன்னதென உரைப்பதாகிய கருத்துரையே என்றும் மேலே, **“சொற்ற பொருளுணர்த்தலன்றி”** என்றமையின் அது விளக்கவுரையின் - பதவுரையின் வேறானதென்றும் கொள்ளவைத்து நுதலியதறிதல், உரைபற்றிய உத்தியே எனும்படிக்கு அமைதல் காணலாம்.

இந்நிலையில், பேராசிரியர் நூல், உரை என்னும் இரண்டும் சார் உத்தியாகவே நுதலியதறிதலைக் கொண்டார். **”சூத்திரத்துள் ஒதிய பொருளாற் சொல்லப்படும் பயன் இல்லதுபோலச் சொல்லியதனானே அதற் கேற்றவகையாற் கருதியுணரப்படுபொருள் இன்னதென்றுகொள்ள வைத்தல்”** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.208) எனும் பேராசிரியர் கூற்றான் அது நூலுத்தி எனக் கூறினமை காணவேண்டும். மேலும், **“நூலின்வேறாகிய பாயிரத்துள்ளாயினும் இந்நுதலியதறிதல் வருதலும் உத்தி என்றற்கு”** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.208) எனவும் அவர்தரும் உரையான் பாயிரத்துள் நூல் நுதலியபொருள் கூறலும் நுதலியதறிதல் என அவர் கொண்டு, அதனை நூல் உத்தியாக அடக்கியுள்ளமை புலப்படும்.

இதனை **"'வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார்' (தொல்.சொல்.கிளவி:46) எனவும், 'சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்' (தொல்.சொல்.கிளவி:41) எனவும் இவை வழுவற்க வழுவமைக்க என்னும் இருபகுதியுள் வழுவமைத்தற்கெழுந்தனவென்பது கருதினான் ஆசிரியனென்பது அறியவந்தன"** எனச் சொல்லித் தெளிவுபடுத்துகிறார். (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.208)

பேராசிரியர், தான் உரையுத்தியாகக் கொண்ட உய்த்துக்கொண்டுணர்தலின் வகையாக நுதலியதறிதலைச் சொல்லுதலாலும், நுதலியதறிதல் இனத்தை **"மூவகைத் தமிழ் வழக்கமும்.................... பகுதியாய் அடங்கும்"** என்று (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.208) அவதாரிகை எனக் கருதும்படி விளக்கியுள்ளமையாலும், **"இன்ன கருத்துப்போலும் என்று அறிய வைத்தலும், உரைவகையானும் நுதலியதறியச் சொல்லுதலுமாம்"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.233) என்று அவரே வெளிப்படக் கூறுவதனாலும் உரையுத்தியாகவும் கொண்டு தமக்கு இரண்டு முடிவுண்மை புலப்படுத்தல் காணலாம்.

இந்நிலையில், பேராசிரியர் மட்டும் உத்தியும் அதன் இனமுமாக விளக்குதலின் அவர் உரைமுறைப்படி நுதலியதறிதல் உத்தியை நூலுத்தியாகவும் (சிறுபான்மை உரைக்கும்), அதன் இனத்தை உரையுத்தியாகவும் (சிறுபான்மை நூலுக்கும்) கொண்டுள்ளமை புலப்படுதல் காணலாம்.

நுதலியதறிதல், உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகங்கூறல் ஆகியவற்றின் இடையமைந்த ஒற்றுமை

நுதலியதறிதல், உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகங்கூறல் ஆகியன ஒத்த தன்மை உடைமையான் இனம் என்று இவற்றை இளம்பூரணர் கொண்டதாகக் கருதப்பெற்றது. பேராசிரியரும் இவற்றை **"ஒருவகையான் யுடைத்து"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994) என ஒரு சார்பாக்கியுள்ளார். எனவே, இவற்றிடை அமைந்த ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பது இன்றியமையாததாகும்.

நுதலியதறிதல், 'நேரடியான சொற்பொருள் கூறுவதன்றிக் கருத்துரையாகவும், ஒரு பயனைக் கருதியுணரவைக்கும் சூத்திர நிலையாகவும்' முறையே இரு உரையாசிரியரும் கொண்டனர் என்பது காணப்பெற்றது.

உய்த்துக்கொண்டுணர்தலாவது **"ஒரு சூத்திரத்துள் ஓரிலக்கணம் ஓதியவழி அதற்குப் பொருந்தாமை உளதாகத் தோன்றின் அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல்"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.204) என்று இளம்பூரணரும் **"ஒரு வழி ஒரு பொருள் சொல்லியக்கால் அதன் கண்ணே மற்றொரு**

பொருளினையும் கொணர்ந்து கொண்டறியுமாறு தோன்றச் செய்தல்" (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.232) என்று பேராசிரியரும் உரைவரைந்துள்ளனர். இதனால் உய்த்துக்கொண்டுணர்தலை, 'ஒன்றின் இலக்கணவிதியை ஓதியக்கால் பொருள் பொருந்தாமை கண்டு தக்க பொருள் கொண்டு இலக்கண விதியைக் கொள்ளலும்', 'பொருள் பொருந்தியவழியும், பிறிதொரு பொருளும் தோன்றுமாறு செய்தலும்' இதன் இலக்கணமாக முறையே இருவரும் கொண்டது அறியலாம்.

ஞாபாகங்கூறலாவது **"இரட்டுறமொழிந்து இரண்டு சொற்கும் பொருள்சோடல்"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.204) என்று இளம்பூரணரும் **"சூத்திரம் செய்யுங்கால் அதற்கு ஓதிய இலக்கண வகையானே சில்வகை எழுத்தின் செய்யுட்டாகவும் நாடுதலின்றிப் பொருள்நனி விளங்கவும் செய்யாது அரிதும் பெரிதுமாக நலிந்துசெய்து மற்றும் அதனானே வேறு பல பொருளுணர்த்தல்"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.232) என்று பேராசிரியரும் உரைவரைந்துள்ளனர். இவ்வுரைகளான், இரண்டு பொருள்படுதலும், இரண்டு பொருள்படுவது என்பது தெரியும்படியான வாக்கிய அமைப்புகளுடன் ஒரு சூத்திரத்தை அமைத்தலும் இதன் இயல்பு என விளக்கங்கண்டுள்ளமை புலனாதல் காணலாம்.

இவ்வாறாக, ஒரு நூற்பாவின் நுதலிய கருத்தை ஊகித்துப் பெறவைத்தல் / பயன் இன்னதெனக் கருதியுணரவேண்டிய சூழ்நிலையை ஊகித்துப் பெறவைத்தல், ஒரு இலக்கண விதிக்கு அமைந்த நூற்பாவில் அவ்விதியை சரியே கண்டு தெளிதல்/ மற்றும் சில இலக்கண விதிகளை ஊகித்துப் பெறவைத்தல், ஒரு நூற்பாவின் இரண்டு அர்த்தங்களை ஊகித்துப் பெறவைத்தல்/ அரிதும்பெரிதுமாக நூற்பாத் தொடர்களை அமைத்துப் பல அர்த்தங்களை ஊகித்துப் பெறவைத்தல் என்பன முறையே நுதலியதறிதல், உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகங்கூறல் முதலியனவற்றின் இயல்புகளாக அமைதலின் மூன்றும் நேரடியே செய்திகள் பெறாதநிலையில் உரையாசிரியரை, வாசகனை ஊகித்துப் பொருள் பெறும்படி செய்தல் காணலாம். இதுவே இவற்றிடை ஒற்றுமையாம்.

நுதலியதறிதல், உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகங்கூறல் ஆகியவற்றின் இடையமைந்த வேற்றுமை

நுதலியதறிதல், உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகங்கூறல் ஆகியவற்றின் இடையமைந்த வேற்றுமைகளைப் பேராசிரியர் விளக்கியுள்ளார். **"நுதலியதறிதலோடு இதனிடை வேற்றுமை என்னை எனின், அது வாளாது பயமில கூறியதுபோலக் கூறியவழி இவ்வாறு கூறியது இன்ன கருத்துப் போலும் என்று அறியவைத்தலும் உரைவகையான் நுதலியதறிதச் சொல்லுதலுமாம். இஃது, அன்னதன்றி அச்சூத்திரந் தன்னான் ஒரு பொருள் பயந்ததன்தலையும் பின் ஒரு பொருள் பெறவருதலின் இது**

வேறு என்பது" (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.233) என்று பேராசிரியர் உரைகூறியவழி நுதலியதறிதலும் உய்த்துக்கொண்டுணர்தலும் ஊகிக்கப்படுவனவேனும் முன்னது ஒன்றும் பயவாததுபோல் நின்று ஒரு கருத்துச் சூழ்நிலை மட்டும் கொள்ள வைத்தலும், பின்னது தான்கூறிய ஒரு பொருளுடன் அதன் சார்பின் மற்றொரு பொருளைப் பெறவைத்தலும் என வேறுபடுதலை விளக்கிக்காட்டுகிறார்.

"ஞாபகங்கூறலொடு இதனிடை வேற்றுமை என்னை எனின், பயமில்லாத போலவும் அரிதும் பெரிதும் ஆகவும் இயற்றி எளிதும் சிறிதுமாக இயற்றாது சூத்திரம் செய்தல் வேறுபாடு நிமித்தமாகத் தோன்றிக் கொள்வதொரு பொருள் பெறவைத்தலின் இதுவும் வேறெனப்படும்" (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.233) என்று பேராசிரியர் உரைகூறியவழிப் பிறிதொரு பொருள் ஊகிக்கப்படுதல் உய்த்துக்கொண்டுணர்தலுக்கும் ஞாபகங்கூறலுக்கும் பொதுவெனினும் சூத்திரத்தின் வாக்கிய அமைப்பு வேறுபடும் என்றவர் விளக்கிக்காட்டியுள்ளார்.

மேலும், இளம்பூரணர், 'உய்த்துக்கொண்டுணர்தலானது, நூற்பாவில் சொல்லப்பட்ட விதியை ஆராய்ந்து பெறவைத்தலாகவும்' 'ஞாபகங்கூறலானது, நூற்பாவினை இரண்டு பொருள்படுமாறு செய்தலாகவும் உரைவரைந்துள்ளார்' (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.202). இதனான், இம் மூன்றும் ஊகித்து அறியப்படும்படி வருவனவேனும் நுதலியதறிதல் (ஒரு தனித்த கருத்துச் சூழ்நிலை உடைமையையும்) கருத்துரையாக வருதலும், ஞாபகங்கூறல் இரண்டு பொருள்தருதலும், உய்த்துக்கொண்டுணர்தல் ஒரு இலக்கண விதி ஓதியவழிப் பிறிதொரு பொருள் அது சார்ந்து பெறவருதலும் என வேறுபடுதல் காணலாம்.

நுதலியதறிதல் வைப்புமுறைக் காரணம்

தந்திர உத்திகளை கூறும் நூற்பாக்கள் யாவும் ஏனோ 32 என்னும் எண்ணிக்கையைக் கைக்கொண்டு உள்ளமை காணலாம். முன்னர்க் கூறப்பெற்ற உத்திகளுக்கு மேலானவற்றைக் கண்ட பிற்கால இலக்கணிகள் அவை எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டிக் கூறாமல் மீட்டும் 32 என்னும் எண்ணிக்கையைக் கைக்கொண்டு சிலவற்றைத் தள்ளியும் சிலவற்றைச் அமைப்பதைக் காணலாம். இதனால் தந்திர உத்திகளை 32 என்னும் எண்ணிக்கையில் நிறுத்தலை ஒரு ஒழுங்கு முறையாக - மரபாக இலக்கணிகள் கொண்டனர் என உய்த்துணரலாம்.

இந்நிலையில், நுதலியதறிதலோ அன்றி அதனின் திரிந்த நுதலிப்புகுதல், உள்ளியதுணர்த்தல் ஆகியனவற்றுள் ஒன்றோதான் முதலில் அமையும்படி தத்தம் தந்திர உத்திச் சூத்திரங்களை இலக்கணங்களில் செய்து அந்த வகையிலும் ஓர் முறைமையைப் பேணி வந்தமை காணலாம்.

"ஒத்த காட்சி யுத்திவகை யுரைப்பின்
நுதலிய தறிதல் ....

....

உய்த்துக்கொண் டுணர்தலொடு மெய்ப்பட நாடி
...." **(தொல்.பொருள்.மரபி.112.1994)**

அவ்வகையில், நுதலியதறிதல் தொல்காப்பியத்தில் முன்வைக்கப்பட்ட வைப்பு முறைக் காரணம் காணவேண்டுவதாகும். இது பற்றிப் பேராசிரியர் ஒருவாறு கூறியுள்ளார் இளம்பூரணர் இது பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. எனினும் அவர் உரைகொண்டும் நுதலியதறிதலின் வைப்புமுறைக் காரணத்தை காணலாம்.

1. இளம்பூரணர் நுதலியதறிதலைக் கருத்துரை கூறலாக வழங்கியமை முன்னமே விளக்கப்பெற்றது. அவ்வகையில் அவர் அமைத்த கருத்துரைப் பகுதியில் பிற உத்திகளைச் சுட்டுதலால், நுதலியதறிதல் அல்லாத பிற உத்திகள் எல்லாம் கருத்துரைத்தலின்பால்பட்டு நிற்றல் காணலாம்.

"இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் எழுத்துக்களது பெயரும் தொகையும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று" (நூன்.01.)

இதன் கண் அதிகார முறைமையும் தொகுத்துச் சுட்டலையும் குறித்தல் காணலாம்.

"இது மேற்கூறிய குறிலையும் நெடிலையும் தொகுத்து வேறு ஓர் குறி இடுதல் நுதலிற்று" (நூன்.08.)

இதன் கண் தான் குறியிடுதலின் சார்பு சுட்டப்பெறுதல் காணலாம்.

"இது அவ்வீற்று விரவுப் பெயருள் ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் உருபியலொடு மாட்டெறிந்து முடிபு கூறுதல் நுதலிற்று" (புள்ளி.27.)

"இதுவும் மேல்மாட்டேற்றோடு ஒவ்வா வேறு முடிபு கூறுதல் நுதலிற்று" (குற்றி.45.)

இவற்றுள் முதலதன்கண் மாட்டேறும் பின்னதில் மாட்டேறு ஆகிக்கொண்டவற்றுடன் எய்தியது விலக்கலும் சுட்டப்பெறுதல் காணலாம்

இவ்வாறாகக் கருத்துரைப் பகுதியில் நேரே உத்தி குறித்துச் சுட்டப்பெறுதலும் அதன் பொருண்மையை மட்டும் சுட்டப்பெறுதலுமாக அமைதல் காணலாம். ஆதலின், நூற்பாவின் கருத்தைத் திரட்டி உரைத்தலும் அதன்கண் அமைந்த உத்தியைச் சுட்டலும்

கருத்துரையாகிய நுதலியதறிதல் என்பதன்கண் அடங்குமென இளம்பூரணர் விளக்கியுள்ளமை புலப்படல் காணவேண்டுவது. இதனால், பிற உத்திகளை எல்லாம் ஒருவாறு தன்னகத்தே சுட்டும் நுதலியதறிதல் உத்திகளை எல்லாம் அறிதல்பகுதியாய் முன்வைக்கப்பட்டது எனக் கொள்ளலாம்.

இதனுடன் இனமாகவும் தொடர்புடையதாக கருதப்படும் உய்த்துகொண்டுணர்தலும் அதன் திரிந்த உத்தியுமே ஈறாக அமைக்கப்பெறும் தொல்காப்பிய (இலக்கணிகளின்) வழக்கையும் ஒருங்குகாணின் பிற உத்திகள் அமைந்து அவற்றைக் கண்டறிய உய்த்துணர்தல் வேண்டப்படுதலின் பின் வைக்கப்பட்டதாகக் கொண்டு இவற்றிடைப் பிறவுத்திகள் சுட்டப்பெற்றதாயும் கொள்ள இளம்பூரணர் உரை வழிசெய்கிறது.

2. இளம்பூரணர் நுதலியதறிதலாகச் சுட்டும் கருத்துரைப் பகுதியைப் பொழிப்பின் பின்னர் அமைக்கும் வியாக்கியானப் பகுதியாக - விசேட உரையாகக் கருதின் கருத்துரைப் பகுதியில் பிற உத்திகள் சுட்டபடுதல் போலவே இதன்கண் சுட்டப்பெறுதலின் அவற்றைச் சுட்டும் நுதலியதறிதல் முன்வைக்கப்பட்டது என்றும் வியாக்கியானப் பகுதியால் சூத்திரத்தின் நுட்பமெல்லாம் தோற்றுதல் உரை இயல்பு ஆகலின் அவ்வாறு முழுப்புரிதல் ஏற்பட்ட பின்னரே பிற உத்திகளின் தேவையும் அது சார்ந்து பொருள்கொள்ளும் சிந்தனையும் எழும் என்பதால் முன்வைக்கப்பட்டது எனலாம். பேராசிரியர் **“உரைவகையான் நுதலியதறியச் சொல்லுதலுமாம்”** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.233) என்றமையின் உரைவகைகளாகிய காண்டிகை, விருத்தி முதலியவற்றான் சூத்திரப் பொருளை விளக்கும் வழியும் இக்காரணம் பற்றியே முன்வைக்கப்பட்டமை கொள்ளவேண்டும்.
3. பேராசிரியர், “நூலின் வேறாகிய பாயிரத்துள்ளாயினும் இந் நுதலியதறிதல் வருதலும் உத்தி என்றற்கு இதனை முன்வைத்தான் என்பது” (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.203) என்று உரைப்பதான் பாயிரம் நூலின் முகப்பில் அமைக்கப்பெறுவதான் எல்லா உத்திகட்கும் முதலில் காணப்படுவது என்னும் காரணத்தான் முன்வைக்கப்பட்டது என வைப்புமுறைக்குக் காரணம் சுட்டியுள்ளார்.
4. இளம்பூரணர் கொண்டபடி கருத்துரையையும் பேராசிரியர் கொண்டபடி பாயிரத்துவரும் நுதலிய பொருள் கூறலையும் நுதலியதறிதலாகக் கொள்ளும்போது மற்றொரு காரணமும் புலப்படுதல் காணலாம். அதாவது நூலுக்குள் அமைந்து விளக்கப்பெறும் அல்லது அமைத்துக்கொண்டு விளக்கப்பெறும் பகுதியாய் வரும் பிற உத்திகள் அத்தனையும் கட்டாயம் இடம்பெறவேண்டும் என்பதில்லை. ஆனால், கருத்துரையாகவோ

நுதலியபொருள் கூறும் பாயிரப்பகுதியாகவோ வரும் நுதலியதறிதல் கட்டாயம் இடம்பெறும் என்பதால் அதன் சிறப்புத்தன்மையை நோக்கிப் பிறவற்றிற்கு முன்வைக்கப்பட்டது எனலாம்.

5. பாயிரத்துள் நுதலிய பொருளைப் பிண்டமாகச் சொல்லும் நுதலிய பொருள் கூறல், அதிகாரங்களைச் சுட்டும் செயப்படுபொருள் உரைத்தல் ஆகிய இரண்டு நிலையில் நுதலியதறிதல் வரும்போது பிற உத்திகளுக்கு இடனளிக்கும் சூத்திரங்கள் கொண்ட நூலையே சுருக்கி விளக்கலின் பிறவற்றான் பெறப்படும் பொருளினும் இதனால் பெறப்படும் பொருளின் பெருமை கருதியும் நூல்/அதிகாரப் பகுதிகளே இதன்கண் அடங்குதலான் பிற உத்திகளும் அடங்கும் என்பதாலும் முன்வைக்கப்பட்டது எனலாம்.
6. பேராசிரியர், "அது வாளாது பயமில கூறியதுபோலக் கூறியவழி இவ்வாறு கூறியது இன்ன கருத்துப் போலும் என்று அறியவைத்தலும்" (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.233) என்றமையின் இன்ன கருத்துப்போலும் என்று அறிய வைக்கும் நூற்பாவானது பிற உத்திகளுக்கும் இடனளிக்கும் தன்மையைப் பெறுதலும் தான் இல்வழிப் பிற வரல் கூடாமையும் உள்ள சிறப்பான் நுதலியதறிதல் முன்வைக்கப்பட்டது எனலாம்.
7. எல்லா உத்திகளும் உய்த்துணர்வு கொண்டே பெறப்படுவனவாய் அமைதலின் உய்த்துணர்வையே முதன்மையாகக் கொண்ட நுதலியதறிதல் முன்வைக்கப்பட்டது எனலாம்.
8. உய்த்துக்கொண்டு உணர்தலும் ஞாபகம் கூறலும் உய்த்துணர்வான் கொள்ள வருவனவே எனினும் நுதலியதறிதல் போல் ஒற்றைக் கருத்தமைவைக் காணாது, இரண்டு பொருள்பெறவைத்தல், பிறிதோர் விதியைப் பெறவைத்தல் பொருட்டு வருவனவாயும் வாக்கிய வேறுபாடுகளால் விளங்க வருவனவாயும் அமைதலின் உய்த்துணர்வான் கொள்ள வரும் மூன்றுள் நுதலியதறிதல் சிறப்பாகக் கொள்ளப்பெற்று முன்வைக்கப்பட்டது எனலாம்.
9. பேராசிரியர், நுதலியதறிதலை **"வாளாது பயமில கூறியதுபோலக் கூறியவழி இவ்வாறு கூறியது இன்ன கருத்துப் போலும் என்று அறியவைத்தலும்"** (தொல்.பொருள்.மரபி.112.உரை.1994: ப.233) என்பதான் நுதலியதறிதலின் உய்த்துணர்வு ஒரு சூத்திரம் பயனில்லாது அமைக்கப்பெறாது என்னும் கருதுகோளின் அடிப்படையில் வருதலைக் குறிப்பாகச் சுட்டுகிறார். இதனால் பிற உத்திகளும் சூத்திரத்தின் பயனைத் தெரியக்கொள்ளுதலும் கூடுதல் பயன்பெறக்கொள்ளுதலுமாகவே அமையும் இயல்பினவாதல்வேண்டும் என்னும் கருத்தான் நுதலியதறிதல் முன்வைக்கப்பட்டது எனலாம்.

முடிவுரை

தொல்காப்பியத்தின் ஈற்று இயலாகிய மரபியலில் ஈற்றில் அமைந்த தந்திர உத்தி குறித்த நூற்பா, சுட்டும் 'நுதலியதறிதல்' என்னும் உத்தியை உரையாசிரியர்களின் உரைவழி அணுகும்போது நுதலியதறிதலை உரையாசிரியர் இருவரும் முறையே கருத்துரையாகவும் கருதியுணரப்படும் பயனைக் கொண்டதாக அமையும் நூற்பாவின் சூழ்நிலையாகவும் கொண்டு இருவேறு கருத்துநிலைப்பாடு கொண்டுள்ளமை, முறையே இருவரும் உரையுத்தியாகவும், நூல் உத்தியாகவும் கொண்டுள்ளமை, இருவரும் இவ்வுத்தியைப் பொருளை ஊகித்துக்கொள்ளவேண்டிய உரையின்/நூற்பாவின் இயல்பாக கொண்டுள்ளமை, பேராசிரியர் உரைப்படி அமையும் நுதலியதறிதலின் இனம், நுதலியதறிதலுக்கு ஞாபகம் கூறல், உய்த்துக்கொண்டுணர்தல் ஆகிய உத்திகளுடன் அமையும் ஒற்றுமை, வேற்றுமைகள், இரு உரையாசிரியர்களின் உரைவழித் தொல்காப்பியம் சுட்டும் பிற உத்திகளுக்கு இது அடிப்படையாக அமைதலின் அவற்றுக்கு முன்வைக்கப்பட்டது என்னும் வைப்புமுறைக் காரணம் ஆகியன தெளியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர், உரையாசிரியர். *தொல்காப்பியம் எழுத்ததிகாரம்.* சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், 2019.
2. க, வெள்ளைவாரணனார். *உத்திவகை, கட்டுரைப் பூங்கா.* தஞ்சாவூர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1984.
3. க, வெள்ளைவாரணனார். *தொல்காப்பியம் மரபியல் உரைவளம்.* மதுரை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1994.
4. ச.வே, சுப்பிரமணியன். *தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும் - குறிப்பு விளக்கங்களுடன்.* சென்னை, மணிவாசகர், 2021.
5. சோ. ந, கந்தசாமி. *தத்துவநோக்கில் தமிழிலக்கியம்.* சென்னை, மெய்யப்பன் பதிப்பகம், 2014.
6. தி, அமுதன். *தொல்காப்பிய உத்திகள்.* சென்னை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2014.

REFERENCES

1. Ilampooranar, Commentator. *Tholkappiyam Ezhutthathikaram*. Chennai, The South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunelveli Ltd, 2019.
2. K, Vellaivarananar. *Utthivakai, Katturaip Poonka*. Thanjavur, Karanthai Agamudaiyar Kalvi Viruthi Sangam, 1984.
3. K, Vellaivarananar. *Tholkappiyam Marapiyal Uraivalam*. Madurai, Madurai Kamarajar University, 1994.

4. S.V, Subramaniyan. *Thamizh Ilakkana Noolkal Moolam Muzhuvathum - with Short Notes*. Chennai, Manivasakar Publishing House, 2021.
5. S.N, Kanthasamy. *Thatthuva Nokkil Thamizhilakkiyam*. Chennai, Meiyappan Publishing House, 2014.
6. T, Amuthan. *Tholkappiya Utthikal*. Chennai, International Institute of Tamil Studies, 2014.